வாழ்க WEDDING வளமுடன்

# திருமண நல்வாழ்த்துகள்

மணமக்கள்

## சு. ராஜா MBA

## வி. சரண்யா M.A., M.Phil., B.ed.

இடம்: வில்லம்மாள் சந்நிதி, ஒரத்தநாடு

தேதி: 17.06.2018

மணவிழாவிற்கு வந்து சிறப்பித்த
அனைவருக்கும் நன்றி

பெண்ணே...
× × × × × × × × × × × ×

புறப்படத் தயாராகு... இதோ
காத்திருக்கிறது உனக்காய் ஓர்
புது வாழ்வு...

எத்தனை எத்தனை கனவுகள்
அனைத்தும் இன்று தித்திக்கும்
உறவாக...

விரைந்திடு இதோ பக்கம் வந்து
விட்டது உனக்கான விடியல்...

இதுவரை இருந்தது .
காக்கையின் கூடு... இனி
காணப்போவதோ குருவியின்
கூடு...

சொந்தமில்லை புதுக்கூடு
ஆனால் அதுவே நிரந்தரமாக
மாறப்போகும் உன் புதுக்கூடு...

மாற்றங்கள் இருக்கும் பலவாக
அதைப் பழகிக்கொள்..
அதுவே ஆகும் இனிப்பாக...

சொந்தம் புதிதுதான் ஆனால்
பந்தம் நிரந்தரம்.. அதைக்
காத்திடு பத்திரம்...

முந்தானைச் சேலைக்குள்
இல்லை முடிச்சு ஆனால் நீ
போடப் போகும் முடிச்சு அது
ஆயுள் முடிச்சு...

காத்திடு அதனை ..அது
காலமும் தொடர்ந்திடும்
அழகிய முடிச்சு...

உன்னவன் போடுவது மூன்று
முடிச்சு ஆனால் அதுவே உந்தன்
ஆயுள் முடிச்சு... ஆம்

விண்ணவன் தந்த
துணைவனவன் உன் மன்னன்
முகம் கோணா வாழ ஓர் முடிச்சு...

பிறந்திட்ட வீடும் மறவா
துறந்திட்ட உறவாய் நினையா
மறந்திட கூடாதென்ற ஓர்
முடிச்சு...

புகுந்திட்ட இல்லம் புகழ
பிறந்திட்ட வீடும் மகிழ
வாழ்வாங்கு நீ வாழ போடும்
மூன்றாம் முடிச்சு...

மூன்று முடிச்சும் மகிழ
ஊன்றிட்ட வாழ்க்கை சிறக்க
என்றென்றும் நீ மணக்க
சிறக்கட்டும் இந்த மஞ்சள்
முடிச்சு... பெண்ணே..

இனி அது உன் வீடு அங்கு

அடுப்படி மாற்றமிருக்கும்
ஆகாரம் மாற்றமிருக்கும்...

உடையிலும் மாற்றமிருக்கும்
உரிமைக் குரலிலும்
மாற்றமிருக்கும்
பூஜை யறையில் மாற்றமிருக்கும்
பூசனை முறையில்
மாற்றமிருக்கும் தட்டில்
மாற்றமிருக்கும் அன்பு
உதட்டிலும் மாற்றமிருக்கும்
அனைத்தும் பழகிக்கொள்
அதுவரை பொறுமைக்
கற்றுக்கொள்...

மண்ணும் பொண்ணும் ஒன்னு
இரண்டிலும் மறைந்திருக்கும்
பொன்னும் குணமும் ஒன்னு...

புடம்போடாது மிளிராது தங்கம்...
என் தங்கமே உன்னை

புடம்போட புடம்போட மின்னிடு
என் வைரமே...

வீட்டிற்கு வீடு வாசற்படிதான்
அது நாட்டிற்கும் நாட்டிற்கும்
உள்ள நவரசம் தான்...

ஏற்றங்களும் வரும்
இறக்கங்களும் வரும் என்றும் நீ
சமமாய் இரு...

கோபமோ மோதலோ
கொல்லைப்புறம் விட்டு விடு
மகிழ்வோடு படியேறு
மனமகிழ்வோடு உறவாடு...

அனைத்திடு உறவுகளை
அரவணைத்திடு மனங்களை
அம்மா வழி உறவும் சரி மாமியார்
உறவும் சரி...

அத்தனையும் உன் சொந்தம்
அதுவே இறைவன் தந்த வரம்
ஆணுக்கு ஒரு வீடு தான்...
ஆனால் உனக்கோ இரு வீடு...

இரண்டும் ஒன்றுதான் அதில்
முரண்பாடும் வரும்தான் ஆனால்
உன் முகத்தின் சிரிப்புத்தான்...
அதில் அரண்டிடும் வம்புதான்...

புறம்பேசுவோர் கண்டு பயந்து
விடாதே பிற்போக்காய் நீயும்
வாழ்ந்து விடாதே முற்போக்காய்
வாழ்ந்திடு முதுகில் குத்துவோர்
நாணிட...

தலைக்கணமாய் வாழ்ந்து
விடாதே புது...
இலக்கணமாய் வாழ்ந்து காட்டு
தகுதியை மட்டும் மறந்து
விடாதே தன்மானம் அதனையும்

காத்திட மறவாதே....-
பெண்ணே..

ஓர் இடத்தில் மலர்ந்து மணம்
வீசியச் செடி நீ மாற்றிடத்து
மண்ணோடு கலந்திட நாட்கள்
ஆகும்...
மாதமும் ஆகும்...

தளர்ந்திடாதே .. வாடிடாதே ...
நீயொரு வாடாமலர் என்பதையும்
மறந்திடாதே...

நீ வேரூன்றும் வரையே
போராட்டம் பிறகில்லை உனக்கு
தடுமாற்றம்...
அதுவரை காத்திடு பொறுமை
யோடு வாழ்ந்திடு புகழ்பெற்று
மகிழ்ந்திடு... பெண்ணே...

தனியாக வாழ நினையாதே

தனித்துவமாக வாழ்ந்து காட்டு ..
கூட்டாஞ்சோற்றின் ருசியே
இனிக்கும்.!! ஆம்
தனிமையில் உண்டு
பலவீனம்.... அதில் இணைந்த
கைகள் கொண்டிருந்தால்
அதுவே பலம்..!!

இயற்கையை நேசி
இல்லாதோரையும் நேசி ..
இனி இதுவே உன் சுவர்க்கம்
அதை அழகாய் சுவாசி...
ஒற்றுமை கொண்டே வாழ்
மதுரை மீனாட்சி போல்
வீட்டையாண்டு...

அதற்கு மாறிடு தஞ்சை
பொம்மையாய்.. வீசிடு
இளந்தென்றலாய்...

× × × × × × × × × × × × × × × × × × × × × ×

ஆணே..... !!

அடங்காத காளை நீ அடக்க
வருகிறாள் உன்னை இனி...

அடங்கி விடாதே ஆனால்
அடங்காமல் இராதே...

கற்றுக்கொள் நடிக்க.. இனி
கடிவாளம் உன் கைப்பற்றிக்
கொள்...

பெற்றவள் ஒரு பக்கம் வருபவள்
ஒரு பக்கம் ...
இரண்டிற்கும் நடுவே குடும்ப
வண்டி ஓட்டு. சமத்தான
வண்டிப்பாகனாய் மாறு...

வந்தவளையும் விட்டுக்
கொடுக்காதே...
வளர்த்தவளையும் விட்டுக்

கொடுக்காதே ...

வாய்பூட்டு போட்டுக் கொள்..
வலது இடது காதை செவிடாக்கி
வலியச் சென்று மாட்டாது..
வந்தச் சண்டையில் மாட்டாது..
வயிற்றைப் பிடித்தபடி உறங்கிக்
கொள்...

அடித்து பிடித்து ஓய்ந்து வரட்டும்
ஆற அமர அமர்ந்தபடி
அமைதியாய் கதைக்கேள் அதை
முடிந்தால் அழகிய படமாக்கு
இல்லை வாழ்க்கைப்
பாடமாக்கு...!
உழைப்பது மட்டும் உன்
வேலை யல்ல உறுதிக் கொண்ட
மனமாய் உருக்குலையாது
குடும்பமாக்கிடு...

ஏற்றி விட்டு ஏரோட்ட

நினைக்கும்  ஆளுக்கெல்லாம்
ஏனென்று கேட்காது போய்விடு
எட்டி நின்றுப் பார்த்தாலும்
எவரும் போற்றும்படி வாழ்ந்திடு...

புதுப்பெண் சமையல் ருசி
மாறலாம்..
புதுமைச் செய்கிறேனென்று
புலம்ப வைக்கலாம் புதுக்
குழம்பை உற்றி...

பக்குவமாய் ருசித்திடு அவள்
மனப்பாரம் ஏறாதவாறு
பார்த்திடு...

சோதனைகள் பல வந்திடும்
உனக்கு சோர்ந்து நீயும்
அமர்ந்திடாதே சோகத்தில்
ஆழ்ந்திடாதே...

மோகத்தில் வீழ்ந்தாலும்
பாகத்தை பிரித்திடாதே...

உனை நம்பி வந்தவளுக்காய்
நேரம் ஒதுக்கு...
அவள் உன்னை மட்டுமே நம்பி
வந்தவள்
உனக்காகவே வாழ வந்தவள்..
நீ அவளோடு செலவிடும் நேரமே
நிம்மதியான வாழ்க்கை யின்
அடித்தளம்...!!

அதேநேரம் உனை
ஈன்றவளுக்கும் நேரம் ஒதுக்கு...!!
இருவரையும் ஒன்றாக அமர
வைத்து கதைப்பேசு...

மனம் விட்டு மனம் பேச
மனதிற்குள் பாரமேது.. சமமாகப்
பாவித்திடு சமநீதியை தந்து
விடு சம்சாரம் உயிர் மூச்சாய்
நினைந்துவிடு...
கோவத்தை படிக்கட்டோடு

நினைக்கும்  ஆளுக்கெல்லாம்
ஏனென்று கேட்காது போய்விடு
எட்டி நின்றுப் பார்த்தாலும்
எவரும் போற்றும்படி வாழ்ந்திடு...

புதுப்பெண் சமையல் ருசி
மாறலாம்..
புதுமைச் செய்கிறேனென்று
புலம்ப வைக்கலாம் புதுக்
குழம்பை உற்றி...

பக்குவமாய் ருசித்திடு அவள்
மனப்பாரம் ஏறாதவாறு
பார்த்திடு...

சோதனைகள் பல வந்திடும்
உனக்கு சோர்ந்து நீயும்
அமர்ந்திடாதே சோகத்தில்
ஆழ்ந்திடாதே...

மோகத்தில் வீழ்ந்தாலும்
பாகத்தை பிரித்திடாதே...

உனை நம்பி வந்தவளுக்காய்
நேரம் ஒதுக்கு...
அவள் உன்னை மட்டுமே நம்பி
வந்தவள்
உனக்காகவே வாழ வந்தவள்..
நீ அவளோடு செலவிடும் நேரமே
நிம்மதியான வாழ்க்கை யின்
அடித்தளம்...!!

அதேநேரம் உனை
ஈன்றவளுக்கும் நேரம் ஒதுக்கு...!!
இருவரையும் ஒன்றாக அமர
வைத்து கதைப்பேசு...

மனம் விட்டு மனம் பேச
மனதிற்குள் பாரமேது.. சமமாகப்
பாவித்திடு சமநீதியை தந்து
விடு சம்சாரம் உயிர் மூச்சாய்
நினைந்துவிடு...
கோவத்தை படிக்கட்டோடு

புதுமணத் தம்பதிகளுக்கு மட்டுமல்லாது...
மணமக்கள் ..புகுந்த வீட்டில் எப்படி வாழ வேண்டும் என்பதற்காகவும் .. சிறு கருத்தோடிணைந்த எம் கவிதை தொகுப்பு...
உங்கள் கரங்களில்...
படித்து ரசித்தால்...
பாடமாக்கிடுங்கள் வாழ்க்கை யில் ...
அதுவே இநத புத்தகத்தின் விலை..

இப்படிக்கு...
விஸ்வலிங்கம் (Late)
M.Com., B.Ed (RTD A.E.E.O).-
தமிழரசி - M.A.,M.Ed.,
(RTD A.E.E.O)
இவர்கள் ஆசிர்வாதத்துடன்
உங்கள் மன்னை ஜீவிதா அரசி
MCA ; M.PHIL ; B.ED

தமிழ்நெஞ்சம்